



ஓலை 169| ஓசை 292| ஏப்ரல் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## மீனாட்சி சுந்தரம் பிள்ளை

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து

## பொருள்

சோம்பலைத் தழுவிக்கொண்டு வாழ்கின்ற அறிவற்றவன் பிறந்த குடியானது, அவனுக்கு முன்பாகவே அழிந்துவிடும். அதாவது, உழைப்பில்லாதவன் தன் குடும்பத்தையே அழித்துவிடுவான்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை!

பாவகை : வெண்கலிப்பா




இடிமின்னல் சினத்திற்கு அடங்கியேதான் மறைந்துபோன
அடிமையான கதிர்நிலவு தமக்குந்தாம் தீமைவேறு
இருப்பதற்கோ வழியில்லை, என்பதைப்போல் ஆள்வோரின்
நெருப்பொத்த சினம்கொண்டால் நிலம்வாழும் உயிர்களுக்கு
தீங்குவேறு இருப்பதுண்டோ? தீமைதானே உலவுமன்றோ!
ஈங்கெவரும் நலமுடனே இனிதுடனே உயிர்க்கவேண்டின்
பொல்லாத சினத்தினையும் புதைத்துவிட்டு வளமாக்க
நல்வினைகள் விதைத்தல் நலம்.

குலைதள்ளும் வாழையைப்போல் குப்புறவே விழுந்தேதான்
தலைகுனிந்து பிழைப்பதுவும் சினத்தாலே மக்களது
நிலையென்றால் எவராலே நிமிர்ந்துநிற்கும் இவர்வாழ்வு?
விலையாக உழைப்பீந்தும் விழுந்திருக்க சினத்தினையும்
மக்களுக்கு தருவதுவும் மனமுவந்த ஆட்சியாகும்?
மக்களெல்லாம் இலையுதிர்ந்த மரமாகி இளைத்தழிவர்;
மலைபோன்ற ஆட்சியாளர் மணக்கின்ற பாங்குடனே
தலைவாங்கும் கோபம் தணி

இடைதட்டி இடிப்பொடிந்து இனிமைதுய்க்க இயங்குதலாய்
விடைதவறும் வினாவைப்போல் விழைந்துமக்கள் இறந்திடவே
தொடைதட்டும் உரைநடையாய் தொலைத்திடவே சினம்கொண்டால்
தொடைதட்டாக் கவிதையென துடிந்தெழுந்தே மக்களுமே
கடைதட்டா இயைபுகளாய் கனிந்தசந்தப் பாட்டாக
தடையின்றி எழுந்துநிற்பர்? தனித்தாட்சி கொடுங்கோன்மை
கடைவிரித்துக் கொலுவிருக்கும்; கனிந்துசீறும் நிலைமாறல்
குடைகீழே ஆள்வதே கூற்று.




**இலக்கணக் குறிப்பு:**

மேலே உள்ளப் பாடல் கலிப்பா வகைகளில் ஒன்றான வெண்கலிப்பா வகையாகும். கலியோசையும் வெள்ளோசையும் தழுவி, நான்கடி முதல் எத்தனை அடிகளாலும் வந்து ஈற்றடி முச்சீர்ப் பெற்று, மூன்றாம் சீர் வெண்பா வாய்பாடான நாள், மலர், காசு, பிறப்பு ஆகியவற்றில் ஒன்றைப் பெற்று, கு, சு, டு, து, பு, று என்னும் ஓசையுடன் முடிவதே வெண்கலிப்பா ஆகும் இரண்டடிக்கோர் எதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் மோனைப் பெற்று, பெரும்பாலான காய்ச்சீர்களாய் வரும், சிறுபான்மை ஈரசைச் சீர்களும் விரவி வரலாம். ஒவ்வொரு சீரும் முதல் சீரினை நேரசையில் தொடங்கினாலும், 2, 3, 4 ஆகிய சீர்கள் அடி தோறும் நிரையசையில் தொடங்குவதே கலித்தளையாகும். தளை பார்க்கத் தேவையில்லை இருப்பினும் வெண்டளையும் விரவி வரலாம்.

# நொடிக்கு நொடி மாறும் மனது

## பாவகை : பஃறொடைவெண்பா

1.எண்ணம் சிறக்க என்றும் அலையாமல்
வண்ணம் பெறவே வல்லமை பெற்றிட
கண்பார்க்கச் செய்திடக் காற்றாய்த் திசைமாறும்.
மண்மீதில் நற்பெயர் மாண்பாய்ப் பதிக்கவே
அண்ணிடும் ஆசை அலைந்தே வருத்துமே
இண்டரை நீக்கும் இயல்பை மறக்குமே
உண்ணீர்மை மாறிடும் உன்மத்தம் கொள்ளுமே
உண்மைஞானம் பெற்றால் உயர்வு.

2.அலையாய்ப் புரளும் அவாநிறை உள்ளம்
அலைப்பில் கடுப்பால்
அயர்ந்தேக் கிடக்கும்.
மலையிலே ஏறிடும் மண்ணிலே பாயும்
கலையை விரும்பக் கவனம் சிதறும்.
வலையிலே மாட்டிய வாளையாய்த் துள்ளும்
உலையாய்க் கொதிக்கும்
உலுத்தேச் சிதறும்
தலைச்சுற்றி வீழ்நிலையில்
தன்னை உணரும்.
தலைக்கனம் விடலே தகவு.




கவிஞர் செ. கலைவாணி

வேளைக்கு வேளை வேடங்கள் தரித்து
வேளைகளை தனக்காய் வினையாலே மாற்றி
ஆலைகளாய் தரிப்பர் அழகான பொய்யால்
அவரவரின் நலனை அறுதியிட்டுக் கொண்டு
காலையிலே ஒன்று கண்ணசைத்தால் ஒன்று
கண்டபடி வேடம் கட்டுகிறார் தோதாய்
மாலையிலும் கூட மலர்கிறதே வேடம்
மனமதனை யார்தான் மறைக்காது சொல்வார்

முகமூடி அணிந்தே முழுவுலகம் செல்ல
முனைகின்றார் யாரும் முன்னேற்றம் காண
தகவுதனை இங்கே தளர்ந்திடவும் துணிந்து
தவறான வழியில் தடமமைக்கும் கூட்டம்
பகல்கனவாய் ஆகி பரிசுத்த உண்மை
பரிதவிக்கு திங்கே பாடையிலே படுத்து
நகலெடுத்தாற் போல நாடெல்லாம் வேடம்
நரித்தனமும் உள்ளே நயமாக சிரிக்கும்



கவிஞர் பூர்ணிமா சங்கர்



அன்றொரு நாள்
என்னிடமிருந்து
சில சொற்களை
எடுத்துப் போனவன்
பின்பொரு நாளில்
என்னைச் சந்திக்க
வருகையில்
சில கவிதைகளோடு
வந்தான்
அந்தக் கவிதைகள்
அனைத்திலும்
எனது சாயல்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# காதல் என்னும் பெருந்தீ

இதயத்தின் துடிப்பு
இருமடங்கானது தவிப்பு

இருவிழிகள் பார்த்திட்டால்
இனிமையும் வந்திடும்

கனிவான அன்பினில்
கசிந்திடும் நெஞ்சம்

வஞ்சமில்லாத வஞ்சியின்
வார்த்தைகளில் வசியமே

வசமாகும் உள்ளத்தில்
வாலிபமும் மயங்கிடுமே

ஆசையின் துளிர்ப்பில்
ஆவலது பெருகுதே

வீணையின் நாதமாய்
மேனியெங்கும் சுரமாகிடு

ஈர்த்திட்டப் பாவையே
ஈரமானது மனமே

தணலாய்த் தவிக்கிறேன்
தழுவியேத் தணித்திடுவாயே

காதல் என்னும்
பெருந்தீயால் அனலானதே

அரவணைத்து ஆதரித்தால்
அனைத்தும் சுகமாகுமே

காரிகையே என்னுள்
கானமிசைத்து சென்றிடு



கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

அகர முதல

உன் கைரேகை கூடத்
தேய்ந்துவிடக் கூடாதென
அதிமென்மையாய்
பற்றிக் கொள்கிறது
உன்னை என் நேசம்,
கண்மணி!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# தனிமை


மங்கையராய்ப் பிறந்து - இங்கே
நாள்தோறும் போர்க்களமே!
தோள் கொடுக்கத் தோழி இருந்தும்,
தோற்றுத் தான் போகிறாளோ?

கைகோர்க்க மனம் இருந்தும், இங்கே
உதறிவிட்டுச் செல்கிறார்களே!
வேலைகளைப் பகிர்ந்து கொள்ள
சகோதரிகள் இருந்தும் கூட,
செய்ய ஏனோ மறுக்கிறார்களே!

எப்போதும் குறை சொல்லும்
பெற்றோரிடமிருந்து - அவளுக்கு
விடுதலை வழிதான் எங்கே?

கண்ணீர், கவலை,
துன்பம், துயரம்,
வலி, வேதனை - என
எல்லாவற்றையும் அறிந்தது
அவள் தலையணை மட்டுமே!

தனிமையிலே மூழ்கி
தத்தளித்துக் கொண்டிருக்கிறாள் அவள்!



கவிஞர் மா. மோனிஷா

# வாராத உந்தன் வரவையெண்ணி

வாராத உந்தன் வரவையெண்ணி,
அடிக்கடி கேட்கும்
ஆலாபனைச் சத்தம் போல் - என்
நெஞ்சக் கனலுக்குள் நீருற்றிப் போகிறது
உந்தன் நினைவு!


கதியாய்ச் சுற்றிய
காலங்கள் அத்தனையும்,
கணவேகத்தில் கரைந்தே போனது - நீ
சொன்ன அந்த ஒற்றை வாக்கியத்தில்!

உறவுகளின் உதடுகள் வழியே
உமிழ்வது அத்தனையும்
நஞ்சாய் இருப்பதால்
பஞ்சனையில் துயின்றும்,
பாதித் தூக்கத்தில் கலையும்
என் கனவு மட்டும் - யார்
கணக்கிலும் சேரவில்லை!

அடிக்கடி பார்க்கும்
தொலைக்காட்சி நாடகம் போல்,
துயரத்தைச் சுமக்கும்
தூக்கணாங்குருவிக் கூடாய் - இந்த
நீளும் வாழ்வில்,
நிழலைத் தேடுகிறது என் பாதங்கள்!

வரம் ஒன்றும் வாய்க்காத
வாழ்க்கைப் பயணத்தின் ஊடே,
இரவுப் பறவையின்
இரங்கலை மட்டும்
யார் கணக்கில் கொள்வார்?

இனிதாய்த் தொடங்கும்
பௌர்ணமி நாடகத்தில்,
ஓரங்கக் கதையாய் ஒட்டிக்கொள்ளவும் முடியாமல் - என்
தவிப்பின் தணல் கிளர்கையில்,
ஆரோகணமும் அவரோகணமும் மட்டும்
எங்கிருந்து பிறக்கும்?



இருப்பைத் தொலைத்த பின்,
வெகுவாய் வட்டமிடும் பறவையைப்போல்
நீ இல்லாத உலகத்தில்
எந்தன் கனவு மட்டும் - இன்னும்
காத்திருக்கிறது,
வாராத உந்தன் வரவையெண்ணி!

கவிஞர் யாழிசைச்செல்வா

# நதிதேடும் நாணலாக

நதிதேடும் நாணலாக
நந்தவனத்தில் தனியாக.

நானேன் அலையின்
நடுவில் தத்தளிக்கும்.

மன்னனின் படையில்
மலரோடு வந்தேன்?

மாடப்புறாவின் சமாதான
மாட்சியின் ஊடகத்தோடே.

மனசுக்குள் வந்ததோர்
மயக்கமும் கலக்கமாய்.

மல்யுத்தம் நெஞ்சுக்குள்ளே
மறையுரையாய் பொங்குகறதோ?

மலரின் மணத்தில்
மறைகிறதோ நாணங்கள்.

பெருமிதம் சிந்தும்
பெய்யும் கனமழையும்.

கார்மேகக் குழைசலில்
காவேரியாய் விரியுமோ?

தேடுதலில் கிடைக்கும்
தேவைகளும் மகிமையே.

நாயகனாய் மனதிற்குள்
நாயகியின் ஏக்கங்கள்.

நானிலம் தேடும்
நாயனமே ஏக்கங்களோடே?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# நேசிப்பைத் தொடருங்கள்

எவரையும் நேசிப்போம்
எப்போதும் நேசிப்போம்
நேசிப்பது ஒன்றும் அவ்வளவு
பெரிய குற்றச்செயல் இல்லையே
பாவச்செயலும் அல்லவே

எது நடப்பினும்
எப்போதும்போல நேசிப்போமே
அவர்களே கற்றுக்கொடுப்பார்கள்
நாமாகவே கற்றுக்கொள்வோம்
இரண்டில் எதுவெனினும்
இன்னாரென்று அறிந்துணர்ந்து
இயல்பாகக் கடப்போமே.



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# தங்கம்

மஞ்சள் வண்ண தங்கம்
இன்று சிவப்பு வண்ண
எச்சரிக்கையாய்

பணம் படைத்தோரின்
விரல்களில் மருதாணியாய்
மின்னும் தங்கம்

ஏழைகளின் கரங்களில்
ஆறாத தீப்புண்களின்
அடையாளமாய்

நாள்தோறும் இறக்கை
கட்டி பறக்கும் தங்கம்
ஏழ்மைக்கு ஏக்கங்களாய்

நடுத்தர குடும்பங்கள்
தங்கத்தின் விலை கண்டு
கண்ணீர் துளிகளாய்

சாலையோர நகைக்கடைகளோ
ஏழைக்கு இன்று
எட்டாவது அதிசயங்களாய்




கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

"வெண்பா வடிவில்"

அழலன் அடைவை அமிழ்தெனப் பற்றி
அல்லல் உறும் மக்கு அரசியறியாமையால்
நுளம்புபோல் வீழ்வர் கொடியான்கொற்றம்
புகக் கெடும் குமுகம்.

அழலன்-தீயோன்
அடைவை-வாய்மொழி,பரிசு
உறும்-ஏற்படும்
மக்கு-மக்கள்
கொற்றம்-அரசவை



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு


# மைவிழி

காதலில் கட்டுண்டு மௌனமாய்
கவிதை பேசும் கண்கள்!
கருணையும், பரிவும்
விழி வழி வழிந்தோடும் கண்கள்!

பார்வையால் அள்ளி அணைத்து
இதம் தரும் தேவதை அவள்!
அநீதி கண்டு ரௌத்திரம் கொண்டு
வெடித்துச் சிதறும் எரிமலையும் அவள்!

தீயதைக் கண்டால் சுடும் விழிப்
பார்வை தனலாய் மாறிப் பொசுக்கும்
வித்தை அறிந்தவள்!

மைவிழியின் மையலில்
கரைந்து போவதும்.
வேல்விழியாளின் கோபப் பார்வையில்
சாம்பலாய் எரிந்து போவதும்.
ஆணவனின் நடத்தையைப்
பொறுத்தே அமையும்!



கவிஞர் லதீர சுப்ரமணியன், சென்னை 119

# நீரின் ஆடையில் தாமரை

மொட்டு மலராத
மொத்த அழகையும்,
ஒற்றை உருவத்தில் - ஓர்
ஒல்லித் தேகத்தில்!

தண்ணீர் தடாகத்தில்
தனியான தாமரை.
நீந்தும் மேனியில்
நீர்த்துளி தவழ்கிறது!

நீரின் ஆடையில்
நீரோடைக் கரை மீது,
நடந்து வரும் நதியே!
கடந்து வரும் மதியே!

கால்கள் முளைத்த
காதல் மலரே!
கவிதை பேசும்
காவியத் தளிரே!

கண்கள் சொல்லும்
கம்பன் வரிகள்.
தாசன் காணாத
தாய்த் தமிழ்மொழியே!

இதயத்தின் மலையில்
இளைப்பாறும் கனிகள்.
இதுவரை சுவைக்காத
இரவின் விருந்து!

இருபது விரல்கள்
இணைந்து ருசிக்கும்.
விடியும் வரையில்
விழிகள் விழிக்கும்!

விரதம் முடிக்கும்
பரதத் துடிப்பில்,
வியர்வைத் துளியில்
விழிகள் நீராடும்!

மூச்சுக் காற்றில்
மூன்றாம் பால் வடியும்.
தேகத்தின் வாசம்
தேனாக வீசும்!

சைவ ஆடையில்
வைபவம் தொடங்கும்.
அசைவ ஆடையில்
அசதியில் முடியும்!



கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

கோடை வெயில்
கொளுத்தி நிற்கும் பார்!
கோபத்தின் அனல் வீசும்
கொடூர அரக்கன் அவன்!

ஆடைகளை ஈரமாக்கி
ஆனந்தம் காண்பான்;
அருகே செல்ல முடியா துர்நாற்றம்
அள்ளி வீசுவான்!

பசுமை மறைந்து
பட்டினி போடும் இயற்கை!
புதிய நாமங்களில் ஊடகம்
பதிய வைத்திடும் நோய்கள்!

கோடை வெயிலில் உலர்ந்த திராட்சையாய்
சோடை போனது மனித தேகம்!
தாகம் தேடிடும் உயிர்கள் - அங்கே
மோகம் காட்டுது காணல் நீர்!

கடுப்பென வெயில் எரிக்க
கருகுதே மேனி!
கதிரவனைப் பார்க்க முடியவில்லை,
காட்டுது வெப்பமானி அதன் கோபத்தை!

நாவறண்டு துடிக்குது,
நனைத்திடக் குளிர்பானம் தேடுது!
இயற்கையும் சீற்றம் கொண்டு
இறைவனை அழைக்குது!

மண்ணில் பேசும் யுத்தம்
கண்ணில் கண்ணீரை வரவழைக்கும்!
பேசிடாத அமைதிச் சமாதானம் பேசிடுமா
இந்த கோடை வெயில்தனை?



கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

பழைய வீடு, முற்றத்தில் வேப்பமரம்;
அதன் நிழலில் தாத்தா சொன்ன கதைகள்,
கேள்விப்படாத சொற்கள் மண்ணில் உறைந்து
எலும்பு வரை நம்மைப் பிணைக்கும்!


பழமொழி ஒன்று - சுருக்கமான விளக்கு;
நெடுநாள் தவறாமல் கையைப் பிடிக்கும்!
பட்டயம் தேய்ந்தாலும் எழுத்து நிற்கும்,
முன்னோர் கணக்கைப் பிழையின்றிக் காட்டும்!

கைத்தறிப் புடவையின் ஓரம் தேய்ந்தாலும்
நூலில் உள்ள பொறுமை புதியது இல்லை;
உரல் - அம்மி ஒலி, அதிகாலைப் பாட்டு.
நேரத்தை மெதுவாகச் சமைக்கும் கலை!

சமையல் அடுப்பில் புகைப்படிந்த சட்டி,
அதில் சுவை மட்டுமல்ல, காத்திருப்பும் சேரும்;
பழைய பாதை, கல் தெரிந்தாலும்
காலைப் பனியில் பாதம் அறியும்!

நிற்கும் கோயில், வெடித்த கல்லில்
தெய்வம் மட்டுமல்ல, சமூகம் கூடும் இடம்;
பழமை நம்மை முந்தையதோடு பேசவைக்கும்,
வேகத்தைக் குறைத்து, வேர் நோக்கச் சொல்லும்!

புதியது மின்னும், ஆனால் பழையது நனைக்கும்
மழை போல் உள்ளுக்குள் இறங்கும் நன்மை!



கவிஞர் முர்ஷிதா பேகம், அக்குரணை, கண்டி

# ஈரமுத்தம்

எத்தனை அழகாய்
ஒரு முத்தம்
செம்பவழ
இதழ் எழுதியது
சிலிர்ப்பில் சிலிர்த்த
தேகம் சில்லென்று
கள்ளமில்லாத
கவிதையொன்று
இதழ் ஒற்றியதில்
உயிரோசை
பெரும் திணறலில்
மலடு என்ற
பெயரின் ஒசையை
தட்டிவிட்ட தளிர்.



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# கவிஞனின் வாக்குமூலம்

நான் என்ன செய்தேன் என்பதை - அந்த
இறைவன் அறிந்துவிட்டான்!
நான் என்ன செய்துகொண்டு இருக்கிறேன் என்பதை
இறைவன் அறிந்துகொண்டு இருக்கிறான்!
இனி என்ன செய்யப்போகிறேன் என்பதையும்
இறைவனே அறிவான்!

நீங்கள் யார்?
என் மீது விமர்சனச் சாட்டை வீச
நான் எடுக்கப்போவது "சத்தியச் சாட்டை" - உமது
புறஞ்சொற்களை நையப்புடைக்க!

எனது நம்பிக்கைக் கடலை வற்றவைக்க,
நயவஞ்சகக் குவளையோடு வந்து - நீவிர்
கவலையோடு போகப்போகிறீர்கள்!

நீங்கள் அகரம் அறிந்தாலும் - உங்கள்
அறிவுப் பிழையால் தகரமாய் மாறி,
பழைய இரும்புக் கடையில்
துருப்பிடித்துக் கிடக்கும் துரும்பு!

கள்ளக் குறுநகையும் என் கைவசம் இல்லை;
உள்ளப் பெரும் பகையும் என் கைவசம் இல்லை!

அகம்பாவ வீதிகளில்
நீரற்ற, அறிவின் வேரற்ற,
நிழலற்ற நீச மரம் நீங்கள்!

நான் அப்படி அல்ல
சிறுதுளி அன்பைப் பெருமழையாக்கி,
பெருமழையை அருள் தரும் கடலாக்கி,
பாசம் தரும் பவித்ர வரம் நான்!

கொடுப்பவர்களுடன் கை குலுக்குவேன்!
எடுப்பவர்களைக் கைகழுவுவேன்!
தடுப்பவர்களைத் தமிழ்க் கவிதைகளால்
களை எடுப்பேன்; கவி தொடுப்பேன்!



கவிஞர் முனைவர். ஏ. எஸ். எம். முனியாண்டி

# அப்படியே இருக்கட்டுமே

செதுக்கிய பக்கங்கள்
உன் வாழ்வின்
சில பல பக்கங்களைக் கிழித்தெறிந்திட
உன் மனம் உந்தும்.
அப்பக்கங்கள் அவ்வாறே இருக்கட்டும், விட்டுவிடு!

அவைதான் உன்னை
உன் இறைவனை நோக்கித்
திருப்பி இருக்கும்!
அவைதான் உன்னை
மீண்டும் எழச் செய்திருக்கும்!

அவைதான் நீ யாரென்பதை
உனக்குப் புரிய வைத்திருக்கும்!
அவைதான் உனக்குப்
போலி முகங்களை வெளிப்படுத்தியிருக்கும்!

அவைதான் உன்னைப்
பக்குவப்படுத்தி இருக்கும்!
அவைதான் உன் வலிமையின்
உச்சத்தைக் காட்டியிருக்கும்!

அவைதான் உன் இலக்கின்
தூரத்தைக் காட்டியிருக்கும்!
அவைதான் உன்
தன்னம்பிக்கையைத் தூண்டியிருக்கும்!
அவைதான் உன்
தைரியத்தைத் தட்டி எழுப்பி இருக்கும்!

நீ இன்று இருக்கும் உன்னையே
செதுக்கிய பக்கங்கள் தானே அவை?
ஆதலால் அவை அப்படியே இருக்கட்டுமே!

இத்தனை நலன்கள் செய்திருக்கும் அப்பக்கங்களை
நீ எதற்காகக் கிழித்தெறிய வேண்டும்?
அவை அப்படியே இருக்கட்டும் - என்றும்
உன் வாழ்வின் வரலாற்றுப் பக்கங்களாகவே!




கவிஞர் அறூபா அஹ்லா, கல்முனை (இலங்கை)

# புத்தக மொழி

1
நல்ல புத்தகங்களுடன்
பயணிக்கத் தெரிந்தவர்களை
காலம் எப்போதும் கைவிடுவதில்லை.
வீணாக்குவதுமில்லை. - அவர்களை
அடுத்தடுத்த உயரங்களை நோக்கி
உயர்த்திக் கொண்டே இருக்கும்.


2
புத்தகத்தின் வழி உலகத்தின்
எல்லா அறிவுச் சாளரங்களையும்
உங்களால் திறக்க முடியும்.

3
புத்தகங்களுக்கும் உயிர் உண்டு.
வாசிப்பை நேசிப்பவர்கள் வாசிக்கையில்
புத்தகங்களின் உயிரில்
உறைந்து கிடக்கும் கனவுகள்
வெளிச்சம் பெறத் துவங்குகின்றன.

4
புத்தக சேமிப்பு சாதனையல்ல
புத்தகத்தை வாசித்து
மூளையில் சேமித்து
வாழ்வில் பயன்படுத்துவதே
மாபெரும் சாதனை.

5
செலவின்றி சிறந்த
ஆலோசனை தருவதும்
நமது திட்டங்களை செயல்படுத்த
முன் நிற்பதும்
வழியமைத்துக் கொடுப்பதும்
புத்தகமன்றி வேறில்லை.

6
புத்தக ஏர் கொண்டு
மன வயலை உழுது பாருங்கள்
புதுப்புது சிந்தனைகள் எனும்
விதைகள் முளைத்து
அறிவுப் பசிக்கு
ஆகாரத்தைக் கொடுக்கும்.




7
புத்தகத்தை திறக்கும்
ஒவ்வொரு முறையும்
உங்களின் அறிவுப்புலத்தின்
ஆயுள் கூடுகிறது,

8
அறியாமையின் இருள் விலக
ஆதாரமாக அமைந்து
வெளிச்சத் திறவுகோல்களை
மூளையில் சேமித்து
வாழ்வுப் பயணத்திற்கு
பாதை காட்டுவதே
புத்தகத்தின் தலையாயக் கடமை.

9
பணமும் செல்வாக்கும் அதிகாரமும்
எல்லாவித வசதிகளை வாங்கித் தரும்.
ஆனால் புத்தகத்தின் அறிவுப்புலத்தை
அவற்றால் விலைபேச முடியாது.

கவிஞர் இளையவன் சிவா

# வலியுடன் ஓர் தேடல்



முப்பெரும் தேவிகளும் வாசம் செய்த - அந்த
இல்லமது என் வீடு!
எப்போதும் மகிழ்ச்சியில் திளைத்திருந்ததோ? - இன்று
களையிழந்து போனது ஏனோ?

யார் கண்ணே பட்டதோ? - என்
பாதியாய் இருந்த என் பதியை,
பாவி நான் பறிகொடுத்து விட்டேனே!

எல்லாம் இருந்தும் என்ன பயன்?
என்னவனின் துணை இல்லாமல் போனது ஏனோ?
ஏங்கி ஏங்கிச் சாகிறேனே
ஏக்கப்பட்டு நிற்கிறேனே!

என்றும் மாறாத வடுவாகிப் போனதே!
நினைவு மட்டுமே இன்று நிஜமாகிப் போனதே!
நிழலைத் தேடித் தேடியே - என்
நினைவைத் தொலைக்கிறேனே!

உயிரானவனின் உருவத்தைத் தேடித் தேடி
உருக்குலைந்து போகிறேனே!
பூவும்தான் வாடிப் போச்சே
குங்குமமும் கொட்டிப் போச்சே!

பாவி நான் பெண்ணாய் பிறந்ததே - இன்று
பாவமாகிப் போனதோ?
பளிங்கு போல் இருந்தேனே
பட்டுப்போய் நிற்கிறேனே!

வீடாண்ட ராசா உன்னை
நாடாள அனுப்பி விட்டு,
வாடிப்போய் நிற்கிறேனே - என்
வாசம் இழந்து போனேனே!

வாக்கும் தான் கொடுத்ததென்ன? - எனை
வாடவிட்டுப் போனது ஏனோ?
காலம் தான் ஓடுதய்யா
விழியிரண்டும் கலங்குதய்யா!

உள்ளம் தான் துடிக்குதய்யா
உன் நினைவு தான் வாட்டுதய்யா!
ஓடி ஓடி உழைத்ததென்ன?
ஒன்றும் சொல்லாமல் போனது ஏனோ?

இன்னுமொரு பிறவி உண்டென்றால்
ஓடி ஓடி வாருமய்யா!
இரு கரம் நீட்டி உன்னை அரவணைக்க
காத்திருக்கோம் நாங்களய்யா!

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர், சென்னை

# தவத்தின் வரம்



பத்துத் திங்கள் கருவாக,
பத்திரமாய்க் கருவறையில்.
முகம் காணாமல், தேகம் பாராமல்
கற்பனையில் நாளும் - உன்
கருப்பையில் தவழும்
உலக அழகின் உருவம் உள்ளே!

அகிலம் நீதான், அனைத்தும் நீயே!
மூச்சுக் காற்றை முன்னூறு நாளும்.
பத்தியம் இருந்து,
பச்சைத் தண்ணீர் விருந்துண்டு,
துன்பங்கள் ஏற்றுத்
தூக்கங்கள் மறந்து!

தொப்புள்கொடி குழலில்
தொடரும் உறவு!
வயிறும் வீங்கும், வலியும் தாங்கும்.
முத்தமிழ்ப் பள்ளி - அதை
முத்தத்தில் சொல்லி,
பயிலும் கூடம்
பனிக்குடம் அருகில்!

ஆணோ பெண்ணோ - அது
ஆனந்தம் தாய்க்கு!
தாயும் சேயும் - இருவரும்
தாய்தான் தந்தைக்கு!

வெளியில் வரும் நாள் - அது
வெளிச்சம் வாழ்வில்!
வந்தது வசந்தம்.
தந்தது சுகந்தம்!

முதல் அழுகையில்
முகம் சிரித்தது!
பிரசவக் கண்களில்
கண்ணீர் பிறந்தது!
கவலை போனது - என்
கண்மணி வந்ததும்.
தவத்தின் வரமாய்த்
தவழ்ந்திடும் பிள்ளைகள்!

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# பிரியமானவளே

## (திரையிட்ட அன்பு)

அருகில் இருந்தும்
சில காலமாய் - என்
தொலைவில் நீ!

பக்கம் இருந்தும்
உன் நிழல் கூடத்
தொட்டிட முடியாத
தொலைவில் நான்!

அன்பு எதுவெனச்
சொன்னதும் நீ!
அன்பே பாரமெனச்
சொல்வதும் நீ!

அன்று என்னை
மாற்றியவளே!
இன்று நீயே
மாறி நின்றாயே!

அழகிய நினைவே! என்
நினைவைக் களவு செய்து,
ஏனோ என்னை
விட்டு நீங்கினாய்?

விலகிப் போகிறாய்.
நெஞ்சை உடைக்கிறாய்!
வலி கசிந்து இதயம்
கண்ணீராய் - உன்
விழிகளில் வழிகிறது!


காற்றாய்க் கலந்தாய்.
பிரிக்க முடியவில்லை!
கனவாய் நின்றாய்.
கலைக்கவும் முடியவில்லை!

என்னில் வாழும்
ஜீவனே நீயே.
தொலைவைத் தேடாதே!

இந்தத் தூரம்
என் சிறு இதயம்
தாங்காதே!

நீ இல்லாமல்
எதுவும் இல்லை.
நானும் - இனி
நானே இல்லை!

பிரியமானவளே.
உன்போல
என் உணர்வை மறைக்க
என்னால் முடியாதே!



கவிஞர் க. கார்த்திகா, கோவை

# கோடையில் வாடாதே


கோடையில் வாடாதே
குடித்திடுவாய் தண்ணீரை.
ஆடையில் பருத்தியினை
அவசியமாய் உடுத்திடுவாய்.
வாடைக் காற்றடிக்க
வந்திடுமே மழைதானே.
இடியும் மின்னலிலே
தற்காத்து கொள்வாயே.

வாடிடும் பயிர்களுக்கு
பாச்சிடுவாய் தண்ணீரை
கண்ணீரை சிந்தாமல்
கவனமுடன் செயல்படுவாய்.
தேடிடும் குளிர்வரவே
நாடிடுவாய் தென்றலைத்தான்
ஆடிட வேண்டாமே
வெப்பத்தால் உடல்வருந்த.

கோடியே கொடுத்தாலும்
கோடைவெப்பம் ஆகாது.
தேடியே செல்லும்மனம்
தேவைக்கு இளங்காற்று.
மாறிய சூழ்நிலையால்
மனிதர்களுக்கு பாதிப்பு.
மாறிடுவாய் சூழலுக்கு
மகிழ்ச்சிபெற நிழலுக்கு.

தற்காப்பு வித்தையினை
தவிர்க்காதே இக்காலத்தில்
தன்னலத்தில் கவனமுடன்
தரத்தினையே தேர்ந்தெடுப்பாய்.
உடற்சூடு ஏற்பட்டால்
நீர்மோரும் அருந்திடுவாய்.
வெப்பத்தால் கொப்புளங்கள்
வந்தாலும் காத்துக்கொள்.

கதிரவனின் வெப்பத்தால்
கடுமையாகும் காலநிலை
வாடிவரும் உயிர்களெல்லாம்
காத்திடுவாய் கடமையுடன்.
பயிரோடு பறவைகளும்
பசுமைதனை தேடிவிடும்
நாமனைவரும் நல்லவற்றை
நாளைவரும் எண்ணாதே.



கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன் @ பகலவன், உடுமலைப்பேட்டை

# தனிமை!

நம்முடன் நாம்பேச  வாய்ப்பளிக்கும் தனிமை!
குழுமிய கூட்டத்திலும் ஓடிவந்து ஒட்டிக்கொள்ளும்!
ஆழ்மன ஆசைகளை அசைபோடத் துணையாகும்!
சூழ்நிலையால் தனித்திருத்தல் காலத்தின் கட்டாயம்!
கற்பனை உலகிற்குத் திறவுகோல் இதுவே!
வார்த்தைகள் மௌனமாகும்! கற்பனைகள் சிறகடிக்கும்!
துறவிகளுக்கு ஞானத்தின் பேரொளியைக் காட்டிடத்
துணைநிற்கும்! உள்மன ஓசையைக் கேட்கவும்
ஆன்மாவுடன் உரையாடவும் தனிமையே கருவியாகும்!
வலிகள் வருகையில் முள்ளாய்க் குத்தும்!
அமைதியை நாடுகையில் தென்றலாய் வருடும்!
இதயத் துடிப்பின் இசை இங்கே தெளிவாகக் கேட்கும்!
மன அமைதி, தியானம்,சிந்தனைத் தெளிவென
தனிமையை நாடும் தருணங்கள் பலவுண்டு!
வெல்வதற்கு நம்மைத் தயார்செய்ய - நல்ல
ஆயுதமாய் நம்மைச் செதுக்கும் தனிமை!
சுயவிருப்பால் தனித்திருந்தால் அதிலொன்றும் துன்பமில்லை!
தனிமைப் படுத்துதல் தான் சமூகத்தின் கொடுமை!
முதுமைக் காலத்தில் சுமையாகும் தனிமை!
நாமாகத் தேர்ந்தெடுத்தால் வரமாகும் தனிமை!
நம்மை அது ஆண்டால் சாபமென்றாகும்!
இன்ப துன்பங்களைப் பகிர்ந்து இணைந்து
இவ்வுலகில் வாழ்தலே பேரின்பம் என்றுணர்வோம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரீ

# நழுவும் மீன்கள்

எந்த மீன் தானே வந்து பிடிபடும்?
எந்த பழம் தானே பாலில் விழும்?
முயற்சி இல்லா திருவினை ஏது?
ஊர் கூடாமல் திருவிழா ஏது?

நலமனைத்தும் முயற்சியால் விளைந்தது!
நாடனைத்தும் போரில் வென்றது!
படை நடத்தாமல் களங்கள் கைகூடாது!
வாள் வீசாமல் தலைகள் உருளாது!

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் விலை!
சிலவற்றிற்கு போராட்டம்!
சிலவற்றிற்கு பொறுமை!
சிலவற்றிற்கு சிரிப்பு!

சிலவற்றிற்கு சிந்திப்பு!
சிலவற்றிற்கு மன்னிப்பு!
சில நேரங்களில் யுத்தம்!
சில நேரங்களில் முத்தம்!

களங்களை பொறுத்து காட்சிகள் மாறும்!
திசைகளை பொறுத்து விசைகள் மாறும்!
காலங்கள் மாறும்! கோலங்கள் மாறும்!
வழிகள் மாறலாம்! இலக்குகள் கூடாது!

இமைப் பொழுதும் சோராதிருக்க
சிறகுகள் முளைக்கும்!
முயற்சியால் கூடாதது
விடாமுயற்சியால் கூடும்!

அறிவு யுத்தி செயல் முயற்சி
விடாமுயற்சி சேர்ந்தொழுக!
காலம் எனும் ஆறாவது பூதம்
காலடியில் சேவை ஆற்றும்! மீன்கள் நழுவலாம்!
இலக்குகள் வழுவலாகுமோ?

இன்பங்களை இழக்கலாம்!
இலக்குகளை எங்ஙனம்?



கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

வெயில்
முற்றங்களையும்
மொட்டை மாடிகளையும்
மீண்டும்
அறிமுகப்படுத்துகிறது
தண்ணீர் கேட்கும்
பறவைகளுக்காக



கவிஞர் அன்னலட்சுமிசரவணன்

அன்பு என்னும் கூடுகட்டி
அரவணைத்துக் காத்திட்ட
அப்பா அம்மா அதிசயம்தான்!
நாம் வணங்கும் தெய்வம்தான்!

"அம்மா" என்னும் முதல்வார்த்தை
நாம் பேசும் மொழிகேட்டு
ஆகாயத்தில் மிதந்திட்ட
அன்னையின் சந்தோஷம்
சொல்லியே மாளாதே!

பிஞ்சுக் கால்களால்
எட்டிவைக்கும் முதல்அடி
கால்கள் நோகுமென்று
அப்பாவின் முத்தம்தான்
கால்களும் சிலிர்க்குமே!

பார்த்துப் பார்த்து நம்மையே
பூப்போலத் தாங்கியே
கண்ணில் இமைபோலக்
காத்திடும் பெற்றோர்தான்

தோளுக்கு மேலே
வளர்ந்திட்ட பிள்ளைகளை
இன்னமும் குழந்தையாய்
கண்ணில் வைத்து உயிராய்க் காத்த
பேசும் தெய்வம் - பெற்றோர் எனும் அதிசயம்தான்!

தள்ளாத வயதிலும்
பிள்ளையெனக் காத்திடுவோம்!
முதியோரின் அனுபவத்தை
வாழ்வியலாய் ஏற்றிடுவோம்!

முதியோரின் மடியில் நம் பிள்ளை விளையாட
உறவின் மேன்மை தலைமுறை கடந்திட
"முதியோர் இல்லம்" இல்லாமல் செய்திடுவோம்!
"முதியோர் இல்லாத வீடே இல்லை" என்போம்!




கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம் சேத்தியாத்தோப்பு

# பெண்களின் கனவு

கனவுகள் காற்றாய் வரும்
கண்ணில் ஒளியாய்ப் பிறக்கும்!
சிறு வயதில் விதைத்த நம்பிக்கை
சிறகாய் வளர்ந்து பறக்கும்!

அவள் மனதில் மழை பெய்யும்
அதன் சொட்டுகள் ஆசைகள் ஆகும்!
தடைகள் வந்தாலும் தளராது
தன் பாதையைத் தேர்ந்தெடுப்பாள்!

விழிகளில் தீபம் ஏந்தி
விடியலை நோக்கி நடப்பாள்.
அவள் கனவு வெறும் கற்பனை அல்ல
உலகை மாற்றும் வலிமை!

குரல் இல்லாமல் இருந்த காலம் போய்
இப்போது அவள் ஓங்கி ஒலிக்கும் ஓசை!
சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்
சரித்திரம் எழுதும் சாதனைப் பெண்!

கனவுகள் அவளின் உரிமை
அதை அடைய அவள் ஒரு போராட்டம்!
வெற்றி எனும் மலரைச் சூடி
வாழ்க்கையை அழகாக்கும் அவள் பயணம்!



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# அன்பின் ஆழி

அன்பெனும் ஆழியில்
பாசமெனும் முத்தைத்
தேடித் தேடித்
தொலைந்து போவதே
இயல்பென்று ஆகிறதே!

விடியலில் வெளிவரும்
கதிரவனைப் போல
பிரிவில் வழியும் கண்ணீரும்
சொல்லாமல் சொல்லுகிறது
அன்பின் ஆழ்ந்த தாக்கத்தை!

தீர்த்து வைக்காதே இந்த உணர்வை
தீர்வைத் தேடும்
அலைப்புறுத்தலில்,
எண்ணிலடங்கா கோடி
உணர்வலைகள் மோதுகின்றனவே!

புரிதலின்றிப் போகும் பிரியம்
பிரிவின் ஓரத்தில் நின்று
தொடுகையில் வழியும் கண்ணீர்,
ஒரு மௌனக் கதையை எழுதுகிறதே!

சொல்லாத வார்த்தைகள்
சேராத இதயங்கள்
முடியாத பயணங்கள்
இதுவே காதலின் மறுபக்கமோ?




கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

# கை கோர்த்த கவிதை!

கலையாத கனவில் கலந்தேன்
அழியாத நினைவில் புதைந்தேன்!
ஆண்டுகள் பல அவசரமாய்க் கடந்தாலும்
ஆறவில்லை இந்த ஏழை மனது
எக்கணமும் தீயாய்க் கொல்லுதே
உந்தன் நினைவு!
பிரியமானவனின் பிரிவு - என்
இதயத்தைத் துளைக்கிறது!
மருந்துக்கும் விருந்துக்கும்
விருப்பமான உந்தன் கைக்குட்டை
விழிநீரைத் துடைத்திடும்
விந்தையான மாயம்!

விருப்பமில்லாத் தனிமையை
விரும்பாது ஏற்றது வாழ்க்கை!
வாடிய நெஞ்சுக்கு இதமானது
வாழ்ந்த நாட்களை நினைவுகூரும்
வசந்த மாளிகை நமது இல்லம்!
அதில் வாழ்வதே எனக்குச் சொர்க்கம்!
அன்று - என் கைத்தலம் பற்றிட
பயம் கொண்டாய் 'நீ'!
உன் மரண பயத்தை விரட்டிட
இறுக்கமாய்ப் பற்றினேன்
இறுதிவரை 'நான்'!

இன்று - இனிமையான நினைவுகளை
இடைவெளியின்றி இதமாக
இரவின் மடியில் கழிக்கின்றேன்!
இருவிழி கசிந்திட மருந்தானது
இதுவே எனக்குச் சுகமான சுமை!
ஒன்றிய அன்பில் இருவரும்
நிலாவில் உலா வருவோம்
களங்கமில்லா நம் உறவில்,
முடிவில்லா நம் காதலில்
கை கோர்த்த கவிதையாய் - இக்
காவியத்தில் இணைவோம்
இந்தத் திருமண நாளில்!



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# கோடையைக் குளிர்விக்க தர்பூசணி!

வெளித்தோல் கரும்பச்சை.
உட்புறம் வெண்சிகப்பு!
உடலைக் குளிர்வித்து நம்மை
வெப்பத்திலிருந்து காக்கும்!

மராட்டியம், ஆந்திரம், உ.பி.,
அரியானா, ராஜஸ்தான்
இதன் உற்பத்தி மையங்கள்!
பழுப்பு நிற விதைகளுண்டு!

அதிகச் சாறு! அற்புத ருசி!
இனிப்பின் எல்லை காட்டும்!
தொண்ணூறு விழுக்காடு
நீர் நிறைந்த அற்புதம்!

உயிர்ச்சத்து, ஊட்டச்சத்து,
பொட்டாசியம் நிறைந்ததாம்!
இரவில் வேண்டாம் இதை
பகல்போதில் உண்ணலாம்!

சூரிய ஒளியிலிருந்து சருமம் காக்க
இதயம் இதமாக, தசைவலி போக்கிட
உடல் நீரிழப்பைத் தடுத்து
சோர்வு நீக்கிட உதவும்!

நோய் எதிர்ப்புச் சக்தி கூட்ட
பார்வைத்திறன் மேம்படுத்த
உடல் நலம் காத்திடும்
தர்பூசணி எனும் பழம்!

அடர்பச்சை நிறத்தில்
நீளவாக்குக் கோடுகளும் உண்டு!
அற்புத இப்பழத்தை நாம்
அனுதினமும் சாப்பிட்டு
அகமகிழ்வோம் கோடையில்!



கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

# மண்ணின் மணம் தந்த வான்மழை

நீல வானின் கருப்பையில் கருக்கொண்டாய்;
நிறமற்ற அழகாய் நிலம் நோக்கிப் புறப்பட்டாய்!
தவமிருந்த பூமித்தாயின் தாகம் தீர்க்க,
தேவமிர்தத் துளியாய் மண்ணில் வீழ்ந்தாய்!

சுட்டு எரிக்கும் சூரியனின் சீற்றத்தை,
ஒற்றைத் துளியால் ஒடுக்கி வைத்தாய்!
காய்ந்து போன புற்களின் நாவினில்,
உயிர்ச் சுவையாய் இனிப்பைப் பாய்ச்சினாய்!

சிதறும் போது நீ வைரத் துகள்கள்;
சின்னஞ்சிறு இலைகளில் பனிப் பதக்கங்கள்!
மண் பட்டதும் வீசும் அந்த வாசம்,
இயற்கை சூட்டிய இணையற்ற சந்தனம்!

ஏரி, குளம் என எங்கும் உன் ராஜ்ஜியம்;
உன்னால் தான் உலகிற்கு உயிர்ச் சக்கரம்!
ஓராயிரம் கவிதைகள் சொன்னாலும் தீராது,
உன் ஓசையற்ற அன்பின் ஈரமும் அருளும்!

சிறுதுளியாய் விழுந்து பெரும் வெள்ளமாவாய்;
செந்நெல் விளையச் செய்யும் கருணையாவாய்!
வானம் பூமிக்கு எழுதும் காதல் கடிதம் நீ;
வறண்ட மனதிற்கு இதம் தரும் கவிதை நீ!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# சிதையாச் சுயம்


மேகங்கள் மறைப்பதால்
சூரியன் தன் ஒளியை
இழந்துவிடுவதில்லை!

சிப்பிக்குள் முடங்குவதால்
முத்துக்கள் தன் தனித்துவத்தைத்
தொலைத்துவிடுவதுமில்லை!

மண்ணுக்குள் புதைவதால்
விதைகள் தன் உயிர்ப்பை
முடித்துக்கொள்வதில்லை!

உறவுகள் ஒதுக்குவதால்
உன் சுயத்தின் பேரழகு
சிதைந்துவிடப் போவதுமில்லை!

புறக்கணிப்பின் மௌனத்தில் நீ
நிலைகொள்ளும் போதுதான்,
உன் தனித்துவத்தின் பேரொளி
உன்னில் உதயமாகும்!




கவிஞர் இ. தேவர்மன், முல்லைத்தீவு

# அவள்

தாங்கிப் பிடிக்க
கரங்கள் இருந்தால்
அலறிக்
கூப்பாடு
போடுபவள்தான்

கவனிக்க
ஆள் இல்லை என்றால்
மலையளவு
தைரியமதை
நெஞ்சில்
ஏற்றிக் கொள்கிறாள்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

### பொருளாதாரம் சாரா

இதுதான் நடக்கும் எனச்
சொன்ன விஷயம்
அப்படியே நடக்கையில்.
மனதில் உதித்த
எண்ணங்களை
அப்படியே
வார்த்தையாக்கும் போது
திட்டமிட்டபடியே
செயல் முடியும் போது

உரிய நேரத்தில்
செய்த உதவியால்,
பெற்றவர் முகத்தில்
மலர்ச்சி காணும் போது
நம்மைப் போல்
மற்றவரும்
யோசிக்கையில்

எதிர்மனிதனின்
உடல்மொழியால்
மனதை யூகிக்க முடிகிற போது
நெடிய இடைவெளிக்குப் பின்
உறவின் மற்றும் நட்பின்
சந்திப்பில்.
வருவது பெரு உவகை!
எல்லா சந்தோஷங்களும்
பொருளாதாரம் சார்ந்ததாய்
இருக்க வேண்டிய
அவசியம் இல்லை.

****************************

### இரண்டில் ஒன்று

உரிய மதிப்பும், மரியாதையும்
கிடைக்க வேண்டும் எனில்,
ஒன்று
சக மனிதர்க்கு
அப்படி ஓர் எண்ணம்
இருக்க வேண்டும்!

இல்லையெனில்
நம்மை மதிக்க வேண்டிய
நிர்ப்பந்தம்
சக மனிதர்க்கு
இருக்க வேண்டும்!



வாசிப்பனுபவம்

(காடும் காடு சார்ந்த உலகமும்);
சூழலியல் கட்டுரைகள்

கோவை சதாசிவம் ; அண்மை அச்சு ஜனவரி 2025 ; பக்கம் 144 ; விலை ரூபாய் 150 | வெளியீடு குறிஞ்சி பதிப்பகம் திருப்பூர் ;
தொடர்புக்கு 99 65 07 52 21




வெகுவாக இயற்கை சார்ந்தும் சூழலியல் சார்ந்தும் களச் செயல்பாடுகளின் மூலம் தாம் கற்று உணர்ந்த செய்திகளைக் கொண்டு சமூகத்திற்கு அவற்றை அறியத்தரும் எழுத்தின் வழியே கோவை சதாசிவம் அவர்கள் எழுதியிருக்கும் இந்த நூலில் காடும் காடு சார்ந்த உலகமும் நம் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படுகிறது.

உலகில் வாழும் உயிரினங்களில் கடைசியாக தோன்றிய மனிதன் தனது பகுத்தறியும் அறிவைக் கொண்டு வாழ் நிலையை மேம்படுத்துவதற்கு பலவிதமான வழிகளில் முயற்சி செய்கிறான். சூழலியல் சார்ந்தும் இயற்கையோடு இணைந்து தமது வாழ்வை மேற்கொண்ட வரையில் மனிதனின் வாழ்வியல் வெகு சீராகவே இயங்கிக் கொண்டிருந்தது இயற்கையின் அத்தனை வளங்களையும் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளவும் அவன் முயற்சிக்கிறான் இதகு பொதுநலத்தை தாண்டிய அவனது பேராசையும் வஞ்சகமும் காடுகளை இயற்கையை சீரழிக்க தொடங்குகின்றன எல்லா உயிரினங்களையும் வாழ வைக்கும் புதையலாக கிடைத்திருக்கும் வனங்கள் இன்று வாழ்விழந்து நீர் இழந்து மண் இழந்து மழை இழந்து நீளும் மலைத்தொடர்கள் இழந்து வெறுமனே தவித்துக் கொண்டிருக்கிறது.

விதை நெல் தொடங்கி நெருப்பில் தகிக்கும் பூவுலகு வரை 21 கட்டுரைகளில் உயிர் புதையல் எப்படியெல்லாம் சீரழிந்து கிடக்கிறது என்பதையும் அதற்கு மனிதர்கள் எப்படியெல்லாம் அடித்தளம் இட்டு கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நூல் விளக்குகிறது

கவிஞர் இளையவன் சிவா

எதன் பொருட்டும் இயற்கையோடு இணையாத இரண்டு உயிரினங்களை சேர்த்து உருவாக்கும் பயிருக்குத் தான் மரபணு மாற்று பயிர் வகைகள் என்று பெயர் மரபணு மாற்றுத் தொழில்நுட்பம் இயற்கையின் அடிப்படைக் கட்டமைப்பையே மாற்றி அமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சி என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் மரபணு மாற்றத் தொழில்நுட்பம் எத்தகைய பாதுகாப்பும் இல்லாதது எதிர்காலத்தில் பெரும் துயரத்தை கொண்டு வருவது உயிரினச் சூழலை முற்றிலும் சிதைக்க கூடியது எல்லா தரப்பு விவசாயிகளின் வாழ்வை சீர்குலைப்பது என்று பேசும் நூலின் முதல் கட்டுரை பசிக்கும்போது சோற்றில் கை வைக்கும் நாம் ஒவ்வொருவரும் இந்த சூழலை உணர்ந்து அதற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியத்தை உணர்த்துகிறது.

மரங்கள் பழம் தின்னி வவ்வால் நீர் நிலைகள் இருவாச்சி பறவைகள் நதிகள் கானகம் உயிர்கள் உரையாடுகள் பனைமரம் யானைகள் பிணந்தின்னிக் கழுகுகள் புலி ஆமை மணல் என பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டு இருக்கும் கட்டுரைகள் அனைத்தும் இயற்கையை முழுமையாக பாதுகாக்க வேண்டியது அவசியத்தை எச்சரிக்கையாக உணர்த்துகிறது

வெள்ளியங்கிரி மலை சாரலில் உருவாகி கோவை திருப்பூர் மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் நொய்யல் நதியின் இன்றைய நிலையையும் சாயப்பட்டறை கழிவுகளும் பிற சாக்கடை கழிவுகளும் நொய்யலை எப்படியெல்லாம் சீர்குலைத்து இன்று வெறும் ஓடையாக மாற்றி இருப்பதையும் அறியத் தரும் நொய்யல் தலைப்பிலான கட்டுரை மனிதர்கள் எப்படியெல்லாம் நீர் ஆதாரங்களை அழித்து வருகிறார்கள் என்பதை உணர வைக்கிறது ஒரு நாகரீகம் செழிப்படைய நதிகளில் தாய்களாக நின்று சோறு ஊட்டுகின்றன தாலாட்டுகின்றனர் வாழ்வமைக்கின்றனர் ஆனால் மனிதன் அத்தகைய நீர்நிலைகளை எப்படி எல்லாம் பாழ்படுத்த முடியுமோ அப்படி எல்லாம் அதை இல்லாமலேயே செய்து விடுகிறான். கழிவு நீக்க மேலாண்மையில் இன்னும் மனிதன் ஆரம்பப் பாடமே பயிலவில்லை என்பதையே இயற்கையை சீர்குலைக்கும் அவனது செயல்பாடுகளின் மூலம்

அறிய முடிகிறது.

வனத்தில் ஒரு சதுர கிலோமீட்டர் பரப்பில் ஆண்டுக்கு 37 டன் சாணத்தை காடெங்கும் பரப்பி வன தாவர பெருக்கத்திற்கு பங்காற்றுவதாய் யானைகளை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் யானை உண்ணும் சில தாவர விதைகளின் வெளிவோடு மிகவும் கடினமானது யானையின் இரைப்பையில் உள்ள நொதிகளால் விதைகளின் வெளிவோடுகள் மிருதுவாக்கப்பட்டு குறுகிய நாட்களிலேயே முளைப்புத்திறன் பெறுகின்றன காட்டில் யானை மட்டும் இல்லாத போனால் வானத்தில் நிறைய தாவரங்கள் இல்லாத போகும் என்கிறார்கள் யானை ஆய்வாளர்கள்.

இயற்கையின் பெருங்கொடை இந்த பூமி. மனிதர்கள் மட்டுமல்ல எல்லா உயிரினங்களும் வாழ்வதற்கு ஏற்ற சூழல் நிலவுகிறது ஆனால் மனிதன் தனது பேராசையால் எல்லா நாடுகளிலும் பிடிக்கும் பூமியின் இயல்பை சீர்குலைத்து விடுகிறான். இயற்கையும் இயற்கை சார்ந்த நிகழ்வுகளும் அதனால் தடம் புரள்கின்றன இயற்கை விளைவித்து நிற்கும் உயிர் புதையல் நம் எல்லோருக்குமான அள்ளித் தீராத பெரும் சொத்து என்பதை மனிதன் உணர்ந்து கொள்ள வேண்டும் தன் கண் முன்னே மரணித்துக் கொண்டிருக்கும் மலைத்தொடர்கள் நீர் நிலைகள் நதிகள் பேருயிர்கள் என்பதை பாதுகாக்க வேண்டியது அவசியத்தையும் அதற்கான வழிமுறைகளையும் மனிதன் உடனடியாக செயல்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் அதையே இந்த நூல் சிறப்பாக பேசிச் செல்கிறது

கட்டுரை



மனித வாழ்வு என்பது அனைவருக்கும் பொதுவானது என்றாலும் அது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மாறுபடும் ஒரு ரகசியப் பயணம். தோற்றத்திலும், பெயரிலும் மனிதர்களிடையே வேற்றுமை இருப்பது போல, அவர்கள் வாழும் வாழ்க்கையின் அர்த்தங்களும் வெவ்வேறானவை. ஒரு மனிதனின் வாழ்க்கை மற்றவருடன் ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. இந்த வாழ்வின் சாராம்சத்தைத் தாங்கி நிற்பதுதான் 'இதயத்தின் அகராதி'.

ஒவ்வொரு மனிதனின் இதயமும் ஒவ்வொரு மர்மமான புத்தகம் போன்றது. அதன் அட்டையை அதாவது வெளித் தோற்றத்தை நாம் பார்த்திருக்கலாம், அதன் பெயரை அறிந்திருக்கலாம். ஆனால், அதன் உள்ளே இருக்கும் ரகசியப் பக்கங்களை யாராலும் முழுமையாக வாசித்துவிட முடியாது. எவ்வளவு நெருக்கமான உறவாக இருந்தாலும், ஒரு சிறு ரகசியமாவது சொல்லப்படாமல் அந்த இதயத்தின் ஏதோ ஒரு மூலையில் விடுபட்டிருக்கும். அந்த ரகசியங்களே ஒரு மனிதனை மற்றவர்களிடமிருந்து தனித்துவமாகக் காட்டுகின்றன.

சாதாரண காகித அகராதியை எடுத்துக்கொண்டால், அதில் ஒரு சொல்லுக்கு நிலையான ஒரு கருத்து அல்லது பொருள் இருக்கும். ஆனால், நம் வாழ்வின் அகராதி அப்படியல்ல. எது நமக்கு நிலைக்கும், எது நிலைக்காது என்பதை நம்மால் ஒருபோதும் ஊகிக்க முடியாது. காலத்தின் சுழற்சியில் அர்த்தங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இளமையில் நம்மால் துடிப்புடன் செய்ய முடிந்த பல விடயங்களை முதுமையின் தளர்வில் செய்ய முடிவதில்லை. உடல் மாறும் போது உள்ளத்தின் தேவைகளும், சொற்களுக்கான அர்த்தங்களும் கூடவே மாறிவிடுகின்றன.

ரீஸ்னா ரமீஸான், அக்குறணை (இலங்கை)

## கட்டுரை

இந்த அகராதி வெறும் காகிதங்களால் ஆனது அல்ல இது அழிக்க முடியாத காலம் சுமந்து வந்த அனுபவங்களால் ஆனது. பல இதயங்களின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், அங்கே துரோகங்கள், ஆறாத வடுக்கள், சொல்ல முடியாத வலி மற்றும் வேதனைகள் மறைந்திருக்கும். இந்த பாரத்தை உலகிற்கு காட்ட விரும்பாத பெரும்பாலானோர் பயன்படுத்துவது 'மௌனத்தையும்' 'போலிப் புன்னகையையும்' தான். வெளியே சிரித்துக் கொண்டிருக்கும் பல முகங்களுக்குப் பின்னால், ஒரு பெரிய கண்ணீர் சரித்திரமே ஒளிந்திருக்கலாம்.

உண்மையில், மனித உறவுகளில் பல பிரச்சனைகள் உருவாவதே இந்த மௌனத்தால் தான். தனக்கான ஒரு நம்பிக்கை மிகுந்த உறவு அமையாத வரை ஒரு மனிதன் தனிமையில் காத்திருக்கலாம். ஆனால், ஒரு உறவு கிடைத்த பின்பும், "இதைச் சொன்னால் என்னவாகுமோ? நம் பந்தம் பிரிந்துவிடுமோ?" என்ற பயமே பல உண்மைகளை உறங்கச் செய்கின்றது. இந்தப் பயம்தான் பல இதயங்களை நெருங்க விடாமல் தடுத்து வைக்கிறது. சிறு சிறு ரகசியங்களை அல்லது கூற கூடாத விடயங்களை மறுப்பது நல்லது தான் அதற்காக அனைத்தையும் மறைப்பது அவ்வுறவில் முள் வேலியை கட்டுவது போன்றாகும்.

இதயத்தில் எத்தனை மர்மங்களைக் கொண்டிருந்தாலும், அதைப் பூட்டி வைப்பதில் தீர்வில்லை. சொல்லப்படாத ரகசியங்களும், பகிரப்படாத வலிகளும் இதயத்தின் பாரத்தை அதிகமாக்குமே தவிர குறைக்காது. 'பேசினால் தீராதது ஏதும் இல்லை' என்ற உண்மையை உணர்ந்து, சரியான உறவுகளிடம் மனந்திறந்து பேசும்போது, அந்த மர்மப் புத்தகம் ஒரு தெளிவாக மாறும் பிரச்சணைகள் தீரும். வாழ்வின் அர்த்தம் தேடலில் மௌனத்தை விடப் பேச்சே சிறந்த வழிகாட்டி.

ரீஸ்னா ரமீஸான், அக்குறணை (இலங்கை)

## பிறப்பும் கல்வியும்

பிற்காலக் கம்பர் என்று போற்றப்பட்டவரும், தமிழ் அறிஞருமான 'மகாவித்வான்' மீனாட்சிசுந்தரம் பிள்ளை' திருச்சி அருகே உள்ள எண்ணெயூரில் பங்குனி மாதம் துவாதசியன்று மகர லக்கினத்தில் வியாழக்கிழமையில் 6 ஏப்ரல் 1815 ல் பிறந்தார். இவரின் பெற்றோர் சிதம்பரம் பிள்ளை -அன்னத்தாச்சி ஆகியோர் ஆவர். தமிழ்ப் புலவரான தனது தந்தையிடமே தமிழ் கற்றார். சென்னை சென்று காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், அம்பலவாண தேசிகர் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களிடம் கல்வி பயின்று புலமை பெற்றார். அற நூல்கள், காப்பியங்கள், சித்தாந்த சாத்திரங்கள், பேருரைகள், சிற்றிலக்கியங்கள் என அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். இவர் அபார நினைவாற்றல் கொண்டவராகத் திகழ்ந்தார். பாடல்களைப் படித்த வேகத்தில் மனத்தில் பதிய வைத்துக்கொண்டுவிடுவார். சிறு வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றிருந்தார்.

## இலக்கியப் பணிகள்

சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கப்படும் காலத்தில் வாழ்ந்த இவர், திருத்தலங்களின் வரலாற்றை விவரித்து ஏராளமான தல புராணங்கள் பாடினார். புராணங்கள், காப்பியங்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள், அந்தாதி, கலம்பகங்கள், கோவைகள், எண்ணற்ற தனிப் புராணங்களை இயற்றியுள்ளார். பிள்ளைத்தமிழ் நூல்களை அதிகமாகப் பாடியதால் 'பிள்ளைத் தமிழ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை' என்று புகழப்பட்டார்.



திரு அ.வில்சன், இதழாசிரியர்

பெரியபுராணச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர். இவரது படைப்புகள் அனைத்துமே செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பாடல்களை இவர் இயற்றியதாக அறிய முடிகின்றது. இதுவரை அச்சில் வெளிவந்த இவரது நூல்களின் எண்ணிக்கை 75 ஆகும்.

## கல்விப் பணி

மயிலாடுதுறையில் பலகாலம் தங்கியிருந்த இவரது புலமையை அறிந்து நாடிவந்த பல மாணவர்களுக்குப் பொருள் எதிர்பாராமல் தமிழ் கற்பித்தார். பணம் பெற்றுக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுக்கும் பழக்கம் இவரிடம் இல்லை. தன்னிடம் கல்வி பயில வரும் ஏழை மாணவர்களைச் சொந்தப் பிள்ளைகளைப் போலக் கருதி உணவும் இடமும் அளித்துக் குருகுல முறையில் பாரபட்சமின்றிக் கல்வி புகட்டினார். கவிதைகள் பாடிச் சன்மானமாகப் பெற்ற செல்வத்தைக் கொண்டே இவர் தனக்கும் தன் மாணாக்கர்க்கும் செலவழித்தார். இவரிடம் பயின்ற மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் உ.வே.சாமிநாத ஐயர், சோடசாவதானம் தி.க. சுப்பராய செட்டியார், குலாம் காதர், நாவலர், சவுரிராயலு நாயக்கர், வல்லூர் தேவராசப்பிள்ளை ஆகியோர் ஆவர்.

’தாயைவிட என் மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான்’ என்று உ.வே.சா. இவரைக் குறிப்பிட்டுள்ளார். இவரது படைப்புகள் 42-ஐ ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு என்னும் பெயரால் இரு தொகுதிகளாக உ.வே.சா. வெளியிட்டுள்ளார். திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்ற பெயரில் இவரது வாழ்க்கை வரலாற்றை உ.வே.சா இரு பாகங்களாக விரிவாக எழுதி வெளியிட்டார். இந்நூலே இவரைப்பற்றி அறிந்து கொள்ள உறுதுணையாக உள்ளது.

## எழுதிய நூல்கள்

இவர் 65 மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன.




- திருவாரூர்த் தியாகராசலீலை
- திருவானைக்காத் திருவந்தாதி
- திரிசிராமலை யமகவந்தாதி
- தில்லையமக அந்தாதி
- துறைசையமக அந்தாதி
- திருவேரகத்து யமக அந்தாதி
- திருக்குடந்தை திருபந்தாதி
- சீர்காழிக்கோவை
- குளத்தூக்கோவை
- வியாசக்கோவை
- அகிலாண்டநாயகி மாலை
- சிதம்பரேசர் மாலை
- சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
- திருநாகைக்காரோண புராணம்
- பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி
- காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்
- பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்
- திருவிடைக்கழிமுருகர் பிள்ளைத்தமிழ்
- ஸ்ரீ அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்
- வாட்போக்கிக் கலம்பகம்
- திருவாவடுதுறை ஆதீனத்துக் குருபரம்பரையகவல்
- ஸ்ரீ அம்பலவாணதேசிகர் கலம்பகம்
- சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது
- குசேலோபாக்கியானம்[2]
- கோவிலூர் புராணம்

## மறைவு

தமிழ் மொழிக்கு ஒப்பற்ற தொண்டாற்றிய தமிழ் அறிஞர் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 01 பிப்ரவரி 1876 இல் மறைந்தார்.



நாளை

# நமதே

நாம் எப்படியும் வாழலாம்

என்ற மனப் போக்கு

விலங்குப் போக்கு.

இப்படித்தான்

வாழ வேண்டும்

என்று விரும்புவது

மனிதப்போக்கு.

அகர முதல

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com